செ.வெ.எண்.777/2020 நாள்: 16.11.2020

தமிழ்நாடு முழுவதும் தொடர் திருத்தம் 2020 முடிவடைந்த நிலையில், இன்று (16.11.2020) மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள், வரைவு வாக்காளர் பட்டியல்களை வெளியிட, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.ரேவதி அவர்கள், பெற்றுக்கொண்டார்கள். ஏற்கனவே துணை வாக்காளர் பட்டியல் 14.02.2020 அன்று வெளியிடப்பட்டது. அதன்படி வாக்காளர் பட்டியல் விபரம் கீழ்கண்டவாறு உள்ளது.

| தொகுதி எண் மற்றும் பெயர் | ஆண் வாக்காளர்கள் | பெண் வாக்காளர்கள் | இதரர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 229, கன்னியாகுமரி | 141549 | 142441 | 99 | 284089 |
| 230, நாகர்கோவில் | 129964 | 132504 | 11 | 262479 |
| 231, குளச்சல் | 132996 | 127206 | 13 | 260215 |
| 232, பத்மனாபபுரம் | 117755 | 113799 | 22 | 231576 |
| 233, விளவங்கோடு | 119931 | 123929 | 23 | 243883 |
| 234, கிள்ளியூர் | 125165 | 121734 | 18 | 246917 |
| மொத்தம் | **767360** | **761613** | **186** | **1529159** |

பின்னர் 14.02.2020 முதல் நடைபெற்ற தொடர் திருத்தம் 2020-ன் படி கீழ்க்கண்டவாறு வாக்காளர் பட்டியலில் சேர்த்தல் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வீடு வீடாக சென்று ஆய்வு செய்யப்பட்டு இறந்த, இடம்பெயர்ந்த நபர்களை கண்டறிந்து நீக்கம் செய்யப்பட்டது.

| | சேர்த்தல் | | | | நீக்கல் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தொகுதி எண் மற்றும் பெயர் | ஆண் | பெண் | இதரர் | மொத்தம் | ஆண் | பெண் | இதரர் | மொத்தம் |
| 229, கன்னியாகுமரி | 260 | 283 | 2 | 545 | 923 | 872 | 0 | 1795 |
| 230, நாகர்கோவில் | 502 | 573 | 0 | 1075 | 998 | 898 | 0 | 1896 |
| 231, குளச்சல் | 207 | 251 | 0 | 458 | 530 | 661 | 0 | 1191 |
| 232, பத்மனாபபுரம் | 344 | 436 | 1 | 781 | 510 | 469 | 0 | 979 |
| 233, விளவங்கோடு | 166 | 172 | 0 | 338 | 1739 | 1834 | 0 | 3573 |
| 234, கிள்ளியூர் | 183 | 219 | 0 | 402 | 1174 | 1215 | 0 | 2389 |
| **மொத்தம்** | **1662** | **1934** | **3** | **3599** | **5874** | **5949** | **0** | **11823** |

இதனடிப்படையில் வரைவு வாக்காளர் பட்டியலில் கீழ்க்கண்டவாறு வாக்காளர் பட்டியல் விபரம் வெளியிடப்படுகிறது.

| தொகுதி எண் மற்றும் பெயர் | ஆண் வாக்காளர்கள் | பெண் வாக்காளர்கள் | இதரர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 229, கன்னியாகுமரி | 140886 | 141852 | 101 | 282839 |
| 230, நாகர்கோவில் | 129468 | 132179 | 11 | 261658 |
| 231, குளச்சல் | 132673 | 126796 | 13 | 259482 |
| 232, பத்மனாபபுரம் | 117589 | 113766 | 23 | 231378 |
| 233, விளவங்கோடு | 118358 | 122267 | 23 | 240648 |
| 234, கிள்ளியூர் | 124174 | 120738 | 18 | 244930 |
| மொத்தம் | **763148** | **757598** | **189** | **1520935** |

வாக்காளர்கள் 16.11.2020 முதல் 15.12.2020 தேதி வரை வாக்காளர் பட்டியலில் உள்ள தவறுகள், விடுதல்கள் போன்றவற்றை கண்டறிந்து கோரிக்கை மற்றும் ஆட்சேபனை மனுக்கள் தாக்கல் செய்யலாம். மேலும் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் 2021-க்குரிய வாக்காளர் பட்டியலில் புதியதாக பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்த சிறப்பு சுருக்கமுறை திருத்தத்திற்கான சிறப்பு முகாம்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் கீழ்கண்ட நாட்களில் நடைபெறுகிறது.

| வ. எண். | நாள் | கிழமை |
|---|---|---|
| 1 | 21.11.2020 | சனி |
| 2 | 22.11.2020 | ஞாயிறு |
| 3 | 12.12.2020 | சனி |
| 4 | 13.12.2020 | ஞாயிறு |

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் அடிப்படையில் 01.01.2021 அன்று 18 வயது பூர்த்தியடைந்த மற்றும் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர் இடம் பெறாதவர்கள் தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க படிவம்-6-ஐ பூர்த்தி செய்து விண்ணப்பிக்கவும், வாக்காளர் பட்டியலில் தவறாக உள்ள வாக்காளர் பெயர், உறவு முறை, புகைப்படம் போன்ற விபரங்களை திருத்தம் செய்ய படிவம்-8, ஒரே தொகுதிக்குள் முகவரி மாற்றம் செய்ய படிவம்-8A, இறந்துபோன, இடம் பெயர்ந்த, இருமுறை இடம் பெற்ற வாக்காளரின் பெயரினை நீக்கம் செய்ய படிவம்-7 உடன் இறப்புச் சான்று இணைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் படிவம்-6A-னை பூர்த்தி செய்து விண்ணப்பிக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் தொடர்பான சிறப்பு முகாம்களில் வாக்காளர் பட்டியலிலுள்ள தவறுகள், விடுதல்கள் போன்றவற்றைக் கண்டறிய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. எனவே வாக்காளர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி விபரங்களை தாமாகவே முன் வந்து தெரிவிக்கும்படியும், வாக்காளர் பட்டியலில் தவறாக உள்ள விபரங்களை திருத்தி 100 சதவீதம் தவறுகள் இல்லாத பட்டியல் தயாரிக்க முழு ஒத்துழைப்பு நல்குமாறும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

வெளியிடலின்போது, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி.ஐ.எஸ்.மெர்சி ரம்யா, இ.ஆ.ப., சார் ஆட்சியர் (பத்மநாபபுரம்) திருமதி.ஷரண்யா அறி, இ.ஆ.ப., நாகர்கோவில் கோட்டாட்சியர் திருமதி.அ.மயில், திரு.கே.எல்.எஸ்.ஜெயகோபால் (அ.தி.மு.க), திரு.பி.லினஸ்ராஜ் (தி.மு.க), திரு.ஹெச்.இசக்கிமுத்து (சி.பி.ஐ),) திரு.எஸ்.செல்லக்குமார் (தே.மு.தி.க), திரு.ஆர்.ராதாகிருஷ்ணன் (காங்கிரஸ்), திரு.ஒய்.வி.வர்க்கீஸ் (தி.மு.க), திரு.மோகனதாஸ் (இந்திய தேசிய காங்கிரஸ்) ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.